2016 ஆகஸ்ட் 11]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பா. பாலகிருஷ்ணா ரெட்டி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிவந்தியாபுரம் மற்றும் பானான்குளம் கிராமங்களில் புதிய கால்நடைக் கிளை நிலையங்கள் அமைப்பது குறித்து மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு பரிசீலிக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்—விடைகள் நேரம் முடிவுற்றது. (குறுக்கீடு)*

[**குறிப்பு:** *ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.*]

2. தகவல் கோரல்

(அ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.*

திரு. மு.க. ஸ்டாலின்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 8 ஆம் தேதி சேலத்திலிருந்து சென்னைக்கு வந்த சேலம்—சென்னை எக்ஸ்பிரஸ் இரயிலில்* Reserve Bank of India *பணம் கொள்ளையடிக்கப்பட்டிருக்கக்கூடிய செய்தியினால், இன்றைக்கு தமிழகத்திலே ஒரு பரபரப்பான சூழ்நிலை உருவாகியிருக்கிறது. இதற்கு அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது? அரசு இந்த அவைக்கு என்ன விளக்கத்தைச் சொல்ல விரும்புகிறது என்பது குறித்து விவாதிக்க வேண்டுமென்று நான் தங்களிடத்திலே ஒரு கவன ஈர்ப்பு அறிவிப்புக் கொடுத்திருக்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இன்றைக்குக் காலையில்தான் கொடுத்திருக்கிறீர்கள். காலை 9—40 மணிக்குத்தான் கொடுத்திருக்கிறீர்கள்.*

[2016 ஆகஸ்ட் 11

திரு. மு.க. ஸ்டாலின்: *ஒரு பரபரப்பான சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. கிட்டத்தட்ட 6 கோடி ரூபாய் அளவுக்குக் கொள்ளையடிக்கப்பட்டிருக்கிறது. இதுவரை தமிழக வரலாற்றில் இல்லாத அளவுக்கு இந்தக் கொள்ளைச் சம்பவம் நடந்திருக்கிறது. எனவே, இது அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்தது என்பதால், இதை எடுத்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இன்றைக்குக் காலையில்தான் கொடுத்திருக்கிறீர்கள். அது என்னுடைய ஆய்வில் இருக்கிறது, உட்காருங்கள்.*

(ஆ) கூடங்குளம் அணுமின் நிலையத்தை நாட்டுக்கு அர்ப்பணித்ததற்கு வரவேற்பு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கரி. இராமசாமி அவர்கள்.*

திரு. கரி. இராமசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றையதினம் பாரதப் பிரதமர் அவர்களும், ரஷ்ய நாட்டினுடைய அதிபரும், முதலமைச்சர் அவர்களும் கூடங்குளம் அணுமின் நிலையத்தை நாட்டுக்கு அர்ப்பணித்திருக்கிறார்கள். கூடங்குளம் அணுமின் நிலையத்தின் முதலாவது அலகைத் திறந்து வைத்து, ஏறத்தாழ தமிழகத்திற்கு 565 மெகா வாட் அளவுக்கு மின்சாரம் வழங்குவதற்குரிய ஏற்பாட்டைச் செய்திருக்கிறார்கள். அதை நான் வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதைப்போல, இந்தத் திட்டத்தை ஏற்படுத்தியது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *விரிவாகப் பேச வேண்டாம், வரவேற்கிறேன் என்று சொல்லிவிட்டீர்கள், உட்காருங்கள்.* Zero hour *அல்லவா? உட்காருங்கள். (குறுக்கீடு) சரி, சீக்கிரம் பேசுங்கள்.*

திரு. கரி. இராமசாமி: *காங்கிரஸ் அரசு அமைந்திருந்தபொழுது, இந்தத் திட்டத்திற்கு ரஷ்ய நாட்டுடன் ஒப்பந்தம் செய்யப்பட்டது. இன்றைக்கு அது திறப்பு விழா கண்டிருக்கிறது. அதனால், தமிழகத்திற்கு மிகப் பெரிய இலாபம் கிடைத்திருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.*